**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No: 155/2022** நாள் 14.08.2025

ம.சா.1, திருமதி. அக்னியம்மாள்

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வாகன விபத்தானது நானும், என் கணவர் வனத்துலிங்கமும், சக்திவேல், காயத்ரி, சத்யா, ராஜம்மாள், முத்துமாரி ஆகிய ஏழு நபர்களும் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோவில் பயணம் செய்த சமயத்தில் தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். ஆட்டோ கவிழ்ந்த காரணத்தில் எங்களோடு வந்தவர்களுக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில் அந்த இடத்தில் ஒரு வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த வளைவான பகுதியில் ஆட்டோ திரும்பும் போதுதான் கவிழ்ந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவரின் வயது 67 என்றால் சரிதான். என் கணவர் விவசாய கூலி மூலமாக நாள் ஒன்றுக்கு ரூ.450 யை வருமானமாக பெற்றுவந்தார் என்று நாங்கள் இந்த மனுவிற்காக வேண்டி அதிக இழப்பீடு பெறவேண்டி ரூ.450 யை வருமானமாக பெற்றுவந்தார் என்று சொல்கிறோம் என்றால் சரியல்ல. என் கணவருக்கு விபத்து சமயத்தில் வயது 67 என்பதால் அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பயர் ஆபிஸில் வேலை பார்க்கிறேன். என் கணவரும் அங்கு தான் வேலைபார்த்தார். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என் கணவர் விவசாய வேலை மூலமாக நாள் ஒன்றுக்கு ரூ.450 சம்பளமாக பெற்றுவந்தது என்ற சொல்வது பொய் என்று சொன்னால் அப்படியில்லை அவர் நாள் ஒன்றுக்கு ரூ.500 வரை சம்பாத்தியம் செய்வார். நான் மனுவிற்காக வேண்டி என் கணவர் நாள் ஒன்றுக்கு ரூ.500 யை சம்பாத்தியம் செய்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பயணம் செய்த ஆட்டோவில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிகையை விட அதிக அளவில் நபர்கள்இருந்து பயணம் செய்ததால் அதனால் ஆட்டோவானது கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதால் எங்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தான் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 வாரிசு சான்றிதழில் என் மகன் பகவத்சிங் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருக்கு திருமணம் முடிந்து 6 மாத காலத்திற்குள் விவாகரத்து ஆகிவிட்டது. அந்த விவாகரத்து உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் மகன் பகவத்சிங் கடந்த் 10 ஆண்டு காலமாக எங்கு போய் உள்ளார் என்று எங்களுக்கு தெரியாது. அவர் காணாமல் போயுள்ளார். என் மகன் 10 ஆண்டுக்கு காணாமல் போய்விட்டதாகவும் அவருடைய இறப்பானது Civil Death என்று நான் சொல்லியபோது அதற்கான நடவடிக்கை மற்றும் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. என் மகன் காணாமல் போது குறித்து நாங்கள் காவல் நிலையத்தில்

புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் மகன் பகவத்சிங்யை இம்மனுவில் நாங்கள் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த தோசத்தல் எங்களுடைய மனுவானது பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. என் மகன் தற்போது உயிரோடு உள்ளா் என்றும் எனக்கும் அவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை இல்லை என்றும் அதிக இழப்பீடு பெறவேண்டி ம.சா.ஆ.6 ஆவணப்படிக்கு இறந்துபோன என் கணவருக்கு வாரிசுதாரர் என்று சொல்லி நாங்கள் இந்த மனுவை மேல் நடத்தி வருகிறோம்என்றால் அப்படியில்லை. 2ம் மனுதாரர் என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகள் விவசாயம் வேலையை பார்க்கிறார். என் மகள்அவருடைய கணவரோடு வசித்து வருகிறார். நாங்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகையை அதிகமாக பெறவேண்டும் என்று சொல்லி சாட்சியத்தில் நான் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. நாங்கள் கோரியுள்ள விபத்து இழப்பீடு தொகை மிகவும் அதகிமானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோவின் ஓட்டுநர் மோட்டார் வாகன விதிமுறைகளையும் காப்பீடு விதிமுறைகளையும் மீறி அளவுக்கு அதிகமான பயணிகளை ஆட்டோவில் ஏற்றி சென்றுள்ளதால் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை 1ம் எதிர்மனுதார் தான் செலுத்த வேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதார் செலுத்த வேண்டியதில்லை என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989
on the 14th day of August2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.